## DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No. 73/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 11 | நாள் | : | 09.10.2025 |
| பெயர் | : | அழகுதுரை | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 09th day of October 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

<u>முதல் விசாரணை</u>

நான் கரிவலம்வந்தநல்லூரில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். கரிவலம்வந்தநல்லூரில் நான் வசித்த போது துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகள் மூலம் வெளிநாட்டிற்கு வேலைக்கு அனுப்புவதாக விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. எங்கள் ஊரைச் சேர்ந்த ஒரு பையனும் என்னைப்போலவே வெளிநாட்டிற்கு வேலை அனுப்ப இருப்பதாகவும் பணம் செலுத்தியிருப்பதாகவும் கூறியதால் கரிவலம்வந்தநல்லூரில் உள்ள பயாட் நிறுவனத்திற்கு 2013ம் ஆண்டு நேரில் சென்று ரூ.25,000/- பணம் செலுத்தி என்னுடைய கடவுச் சீட்டையும் எதிரிகளிடம் ஒப்படைத்தேன் அதற்கு எனக்கு இரசீது கொடுத்தார்கள். அவர்கள் என்னிடம் கூறியதைப்போல் என்னை வெளிநாட்டிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவில்லை நான் அடிக்கடி சென்று

கேட்டு வந்தேன். பின்னர் ஏமாற்றப்பட்டது தெரிந்து கொண்டேன். நான் பலமுறை கேட்டும் வெளிநாட்டிற்கு அனுப்பவில்லை என்பதால் என்னைப்போலவே பலரும் வெளிநாட்டிற்கு அனுப்பப்படாத நிலையில் போலீசார் அழைத்த பின்னர் வழக்கு போட்ட விவரம் தெரிய வந்தது. என்னுடைய கடவுச் சீட்டு இதுதான் அது அ.சா.ஆ-3 ஆகும். அந்த பயாட் நிறுவனம் அதன்பின்னர் மூடப்பட்டுவிட்டது. அதன் பின்னர் பயாட் நிறுவன வழக்கறிஞர் மூலம் கடவுச் சீட்டை திரும்ப தருவதாக சொன்னார்கள். நானும் பலமுறை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் சென்றேன் கிடைக்கவில்லை நானும் விட்டுவிட்டேன். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் கு.வி.**

நான் முதல் விசாரணையில் கூறிய விவரங்களைத்தான் போலீசார் விசாரிக்கும்போது கூறினேன். வழக்கு விவரம் சம்பந்தமாக அய்யாபுரம் புறக்காவல் நிலைய காவல் அதிகாரி கூறியதன்பின்னர்தான் எனக்கு விவரம் தெரியும். போலீசார் விசாரித்ததற்கு முன்போ பின்னரோ நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. எங்கள் ஊரைச் சேர்ந்த பெரியதுரை என்பவர் என்னை பயாட் நிறுவனத்திற்கு அழைத்துச் சென்றவரை போலீசார் விசாரணையின்போது நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். பயாட் நிறுவனம் அருகில்தான் கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.09 18:45:51 +0530

# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No. 73/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 10 | நாள் | : | 09.10.2025 |
| பெயர் | : | பாலமுருகன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 09th day of October 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

<u>முதல் விசாரணை</u>

நான் கரிவலம்வந்தநல்லூரில் குடியிருந்து வருகிறேன். பாண்டிச்சேரி லூகாஸ் டிவிஎஸ் நிறுவனத்தில் நடத்தப்படும் கேண்டீனில் காண்ட்ராக்ட் எடுத்து வேலை செய்து வருகிறேன். நான் பி.எஸ்.சி ஹோட்டல் மேனேஜ்மெண்ட் படித்துள்ளேன். எதிரிகளைத் தெரியும். கரிவலம்வந்தநல்லூரில் நான் வசித்த போது துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகள் மூலம் வெளிநாட்டிற்கு வேலைக்கு அனுப்புவதாக விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. கரிவலம்வந்தநல்லூரில் உள்ள பயாட் நிறுவனத்திற்கு 2012ம் ஆண்டு நேரில் சென்று ரூ.75,000/- பணம் செலுத்தி என்னுடைய கடவுச் சீட்டையும் எதிரிகளிடம் ஒப்படைத்தேன் அதற்கு எனக்கு இரசீது கொடுத்தார்கள். அவர்கள் என்னிடம் கூறியதைப்போல் என்னை

வெளிநாட்டிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவில்லை நான் அடிக்கடி சென்று கேட்டு வந்தேன். பின்னர் ஏமாற்றப்பட்டது தெரிந்து கொண்டேன். நான் பலமுறை கேட்டும் வெளிநாட்டிற்கு அனுப்பவில்லை என்பதால் என்னைப்போலவே பலரும் வெளிநாட்டிற்கு அனுப்பப்படாத நிலையில் நான் ஏமாற்றப்பட்டதாக தெரிந்து கொண்டேன். சுமார் 4, 5 மாதம் கழித்து சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து கடவுச் சீட்டு மட்டும் கிடைக்கப்பெற்றது. அந்த பயாட் நிறுவனம் அதன்பின்னர் மூடப்பட்டுவிட்டது. என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>

என் வீடு கரிவலம்வந்தநல்லூரில் கோவிலுக்கு மேல்புறம் உள்ளது. கோவிலுக்கு எதிர்புறம்தான் கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிலிருந்து காவல் நிலையம் எவ்வளவு தூரமோ அதே தூரம்தான் பயாட் நிறுவனமும் உள்ளது. உதவி ஆய்வாளர் , ஆய்வாளர் மற்றும் துணை கண்காணிப்பாளரின் பதவி நிலை பற்றி தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை யார் வந்து விசாரித்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர் வந்து விசாரித்தார். ஒரு வருடம் கழித்து வீட்டிற்கு வந்து விசாரித்தார். அதற்கு முன்பு நான் ஏமாற்றப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. போலீசார் விசாரித்த பின்னர்தான் பயாட் நிறுவனம் சென்று கேட்டேனா என்றால் முன்னதாகவே கேட்டேன். சம்பவத்திற்கு முன்போ, போலீசார் விசாரித்த பின்னரோ புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ காலகட்டத்தில் அந்த ஊரிலேயே இல்லை. எதிரி ஸ்டுடியோ

வைத்திருந்த விவரம் எனக்கு தெரியாது ஆனால் பணம் செலுத்தும்போது அவர் இருந்தார். பணம் செலுத்தியது சம்பந்தமாகவோ, கடவுச் சீட்டு கொடுத்தது சம்பந்தமாகவோ வேறு எங்கும் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் விளம்பரம் பார்த்ததாக சொல்வதும் பயாட் நிறுவனத்தில் பணம் செலுத்தியதாகவும், கடவுச் சீட்டை கொடுத்ததாகவும் கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.09 18:45:57 +0530